# கம்பீரத்தலைவர் கலைஞரின் பெரும்புகழ் ஓங்குக!

நமது உள்ளத்தில் அழியா ஓவியமாய், உயர்தனிக் காவியமாய் நிலைத்திருக்கும் உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் – உயிரனைய தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆவது ஆண்டு நினைவு தினம் ஆகஸ்ட்7.

இப்போது தான், "எழுந்து வா! எங்கள் தலைவா! எங்கள் உயிரே! உணர்வே! என காவேரி மருத்துவமனைக்கருகிலிருந்து கட்டுக்கடங்காத உடன்பிறப்புகள் எழுப்பிய ஒலி, கடல் கடந்து வாழும் தமிழர் உள்ளத்தில் கவலையையும், கண்ணீரையும், சிந்த வைத்தது போன்றதொரு படக்காட்சி நமது நெஞ்சில் நிழலாடுகிறது!

அறிவில் அண்ணாவையும், ஆயுளில் பெரியாரையும் பிரதிபலித்த தலைவர் கலைஞர் அவர்கள் தனக்கும் மறைவு உண்டு என்று தமிழர் மனமெல்லாம் துடிதுடிக்கச் செய்து, சாவில்லா சரித்திரப் பொன்னேட்டில் இடம் பெற்ற நாள் இந்த ஆகஸ்ட் 7.

கடந்த இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தொடங்கி, இருபத்தியோராம் நூற்றாண்டின் முற்பகுதி வரையென இருபெரும் நூற்றாண்டு களின் அறுதாண்டிற்கும் மேலான இந்திய தமிழக அரசியல் வரலாற்றில் மையப்புள்ளியாக, வரலாற்று நிகழ்வாக தனது ஒவ்வொரு இயக்கத்திலும், நகர்விலும் நிறைந்திருந்த தலைவர், தன்னை ஆளாக்கி, அரசியல் சொல்லித்தந்த அண்ணனது இதயத்தை அவரிடம் ஒப்படைத்து ஒய்வெடுக்கச் சென்றநாள் இந்த ஆகஸ்ட் 7.

சுதந்திரத்திற்கு பிறகு இந்தியாவில் தங்களது ஆளுமைகளை நிலைநிறுத்திய தலைவர்களில் பெரும்பாலும் ராஜாவீட்டுப் பிள்ளைகள், சமஸ்தானாதிபதிகளின் வாரிசுகள், குட்டிக் குபேரர்கள், மேலைநாடுகளில் ஆக்ஸ்போர்டிலும், ஹாரோவிலும், கேம்பிரிட்ஜ்ஜிலும் படித்தவர்கள் என்றுதான் பட்டியல் நீண்டது.

விரல்விட்டு சொல்லக்கூடிய அளவில் தான் சாமான்யர்கள், அடித்தட்டு மக்களின் நிலையுணர்ந்த நடுத்தர வர்க்கத்தினர் அரசியலில் அரங்கேற்றமாயினர்.

அந்த வரிசையில் பஞ்சாயத்து அளவில் கூட அன்றைக்கு இல்லாத திருக்குவளையில் நடுத்தர இசைவேளாளர் குடும்பத்தில் பிறந்து, நாடாளுமன்றத்தின் தலைவர்களை, பிரதமர்களை பலமுறை உருவாக்கிய ராஜதந்திரமும், சாணக்கியத் தனமும் மிகுந்திருந்த தலைவர் தான் நமது உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்கள்.


80 -களில் எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில், திருச்செந்தூர் முருகன் கோயில் அறங்காவலர் சுப்பிரமணிய பிள்ளை கொலையுண்ட போது, அதுபற்றி தி.மு.க.வின் பெரும் கண்டனம், எதிர்ப்பு, விவாதங்கள் எழுந்தபோது பணிந்து போன முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஓய்வு பெற்ற நீதிபதி பால் அவர்களின் தலைமையில் ஒரு கமிஷனை அமைத்து, அதன் தீர்ப்பையும் பெற்றிருந்தார்.

தீர்ப்பு ஆளுங்கட்சிக்கு அவலம் ஏற்படுத்தும் வகையில் இருந்ததால், அதை வெளியிடாமலும் வைத்திருந்தார்.

வெகுண்டெழுந்த தலைவர் கலைஞர் அவர்கள் ஆயிரக்கணக்கான திமுக தொண்டர்களுடன் மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை 200 கிலோ மீட்டர் நீதி கேட்டு, நெடும்பயணத்தை தனது கடும் உடல்நலிவையும் பொருட்படுத்தாமல் மேற்கொண்டார்.

அப்போதும் தனது இயல்பான மந்தத்தையும், மௌனத்தையுமே தொடர்ந்தார் எம். ஜி. ஆர்.

அதே நிலையில் சட்டப்பேரவை கூடியது. பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரைப் பார்த்து, திருச்செந்தூர் முருகன் கோயில் அறங்காவலர் சுப்பிரமணியசுவாமி கொலையுண்ட வழக்கிற்காக அமைக்கப்பட்ட நீதிபதி பால் கமிஷன் அறிக்கை எங்கே? எனக்கேட்க, எம்.ஜி.ஆர்.



மௌனம் சாதிக்க, சற்றும் நிதானிக்காமல் தலைவர் கலைஞர் பேரவைத்தலைவர் அவர்களே, நீதிபதி பால் கமிஷன் அறிக்கையை முதலமைச்சர் வெளியிட மறுப்பதால், நான் வெளியிடுகிறேன். என்று தனது கோப்பிலிருந்த பால் கமிஷன் அறிக்கை நகலை பேரவையில் வெளியிட்டு, பெரும் பரபரப்பை, எம்.ஜி.ஆர். உள்ளிட்ட அமைச்சரவைக்கு, பதற்றத்தை உண்டாக்கினார்.

வெகுநேரம் கழித்து, ஆசுவாசமடைந்த முதலமைச்சர் எம் ஜி. ஆர். வசந்த மண்டபத்தில் சுற்றி யிருந்த அமைச்சர்களிடம் அமைதியாய் கேட்டாராம், " இந்த அரசாங்கத்தை நாம்தான் நடத்துகிறோமா? அல்லது கலைஞர் நடத்துகிறாரா? " என்று.

அரசாங்கத்தின் மிகமிக முக்கியமான ஆவணம் எதிர்க்கட்சித் தலைவரின் கைகளுக்கு கிடைக்கிற தென்றால், எம். ஜி. ஆர் எத்தனை ஏமாளித்தனமாய் இருந்தாரென்பதைவிட, தலைவர் கலைஞர் அவர்கள் எவ்வளவு சாதுர்யம் மிக்கவராக இருந்தாரென்பது அவரது தொண்டர்களான நமக்கு பெருமை தரும் செயலல்லவா!



**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
*கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்*

அதே போல் சற்றொப்ப இதே காலகட்டத்தில் நாடாளுமன்ற மாநிலங்களவை தேர்தல் வருகிறது. தி.மு.க. வசம் 24 சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். வெற்றி இலக்கையடைய 36 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில் தயங்காமல் துணிவுடன் தனது வேட்பாளராக இன்றைய கழகப் பொருளாளர் டி. ஆர். பாலு அவர்களை தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

எம். ஜி. ஆர் தனது உறுப்பினர்களை உற்றுப் பார்த்தார். உறுபோட்டுப் பார்த்தார். சத்தியம் வாங்கி வைத்தார்.

36 வாக்குகள் பெற்று தி.மு.க. வேட்பாளர் டி ஆர். பாலு வெற்றி பெற்றார். இதுவரைக்கும் தெரியாது எப்படித்தான் இந்த எண்ணிக்கை வந்ததென்று!

அது தலைவர் கலைஞர் அவர்களின் அரசியல் சதுரங்கம். அதில் அவர் எப்போதும் வெற்றிவீரனாகவேத் திகழ்ந்தார்.

இப்படியெல்லாம் அரசியல் வானில் அரை நூற்றாண்டு காலமாக தலைப்புச் செய்தியாக நின்று, அதிர்வேட்டு, வாணவேடிக்கைகளை நிகழ்த்திய அசாத்திய திறமைமிக்க தலைவர் கலைஞர் அவர்கள் இன்று நம்முடன் இல்லை.

அவரது வளர்ப்பாய், வார்ப்பாய் ஐந்தாண்டு காலம், அளவிடமுடியாத மக்கள் நல திட்டங்களை செயல்படுத்திய திராவிடப் பேரரசர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் மகத்தான தலைவர் நம்மை இன்று வழிநடத்துகிறார்.

தமிழினத்தை சூழ்ந்துவிட்ட இருளகல இன்னும், இன்னும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணி நாளுக்கு, நாள் தேவையெனும் நிலையில் கோட்டையில் அரங்கேறும் கோமாளிக் கூத்துக்களுக்கு, தற்குறி தர்பாரின் தரம் தாழ்ந்த பேச்சுக்களுக்கு தடைபோட, விடையெழுத புறப்பட்டு விட்டார் தென்னவர் போற்றும் மன்னவர்! நமது சின்னவர்! உதயநிதி அவர்கள்.

திராவிட இயக்கங்களின் பெரும் பணி உதயநிதி அவர்கள் மூலம் சீனப் பெருஞ்சுவர் போல திராவிடப் பெருஞ்சுவராக நீள்கிறதே, என்ற வன்மம், பொறாமை, பொச்சரிப்பு, திடீர் கைது, என பகல் பொழுது முழுவதும் அலைகழிப்பு.

இப்படித்தான் தலைவர் கலைஞர் அவர்களை 1965-ல் மொழிப்போரில் பாளையங்கோட்டை சிறைக்கு கொண்டு செல்ல பெரும் அலைகழிப்பை நடத்தியது அன்றைய காங்கிரஸ் அரசு. அதைப்போலவே இந்தக் காமெடி அரசும் உதயநிதி அவர்களை வதைப்பதாக எண்ணி, தேர்தல் தோல்வியில் துவண்டிருந்த தொண்டர்களையெல்லாம் ஒற்றுமையாய் திராவிடத்தேரை வடம்பிடித்து இழுக்கும் வழியை, வசதியை ஆக.4ந்தேதியன்று செய்து தந்தது.

சென்னையிலிருந்து தஞ்சை செல்லும் சாலையெங்கும் தி.மு.க.வின் தினவெடுத்தப் பெரும்படை கட்டுக்கடங்காமல், காட்டு தர்பார் காவல் துறையின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல், எதிர்காலத்தில் இந்த இயக்கத்தை, இனத்தை வழிநடத்தும் இளம்தலைவனுக்கு தங்கள் ஆதரவைத் தெரிவிக்க காத்துக்கிடந்தனர்.

இதற்கு இணையான கூட்டம் தமிழகமெங்கும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, கல்யாண மண்டபங்களில் அடைபட்டு கிடந்தோம்.

மொத்தத்தில் தேர்தல் தோல்விகள் தி.மு.க. தொண்டர்களை கவலைகொள்ளச் செய்யுமேயன்றி, கடமையிலிருந்து ஒருபோதும் தள்ளி நிற்கவைக் காது என்பதை தமிழ்நாடு மீண்டும், மீண்டும் உணர்ந்திட்ட நாளாகவே நமது சின்னவர் கைதான நாள் அமைந்தது.

ஒருமுறை நமது அறிவியக்கப் பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், " தேர்தலில் வெற்றி பெற்று, அமைச்சர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக கோட்டைக்குள் நுழையும் போது, அடக்கத்தின் காரணமாக தலையை தாழ்த்தி, உள்ளே சென்றோம். ஆனால் தமிழிற்காக, தமிழினத்திற்காக சிறைக்கோட்டம் சென்றபோது, தலை நிமிர்ந்தபடி தான் சென்றோம்!" என்றார்.

அதைப்போலத்தான் கிளம்பிற்றுக்காண் தமிழ் சிங்கக்கூட்டமென தமிழ்நாடு முழுவதும் அலை அலையாக பெருங்கூட்டம் சின்னவர்க்காய் சிறையேகியது.


இத்தகு தீரமிகு வரலாற்றுப் பேரியக்கமாம் நமது கழகத்தை கண்ணின் இமைபோல் காத்து வளர்த்த பெருவீரர்! முத்தமிழறிஞர்! சங்கத்தமிழ் பொங்கும் தங்கத் தலைவர்! தமிழவேள் தலைவர் கலைஞரின் பெரும்புகழ் உரைத்து , அமைதிப் பேரணியால் கடற்கரையில் அறிவாசான் அண்ணாவிற்கு அருகில் துயில்கொள்ளும் தனது தலைவருக்கு மலஞ்சலி செலுத்துகிறார் நமது திராவிடப் பேரரசர் தளபதியவர்கள்!

தமிழின விடியலுக்காக விரல் தேய எழுதியவர்!

குரல் தேயப் பேசியவர்!

கால் தேய நடந்து கடமையாற்றிய கம்பீரத்தலைவர் கலைஞரின் பெரும்புகழ் உரைத்து, அலைகடலோரம் அமைதிப் பேரணியில் சங்கமிப்போம்!

# தலைவா! உன் புகழ் வாழ்க!



தந்தை பெரியாரும்
சிந்தைநிறை அண்ணாவும்
விந்தையென ஓருருவாய்
வந்தளங்கள் மன்னவனே!

"வீழ்வதுநாம் என்றாலும்
வாழ்வதுநம் தமிழ்"என்றே
ஆழ்மனத்தி லே,பதிய
அனைவருக்கும் சொன்னவனே!

அகரச்செந் தமிழுக்கோர்
அரணாக வாய்த்தவனே!
சிகரத்தின் உயரத்தில்
செம்மொழியை வைத்தவனே!

இன்னலுற்று வெஞ்சிறையில்
வெந்தவனே! எந்தமிழர்
முன்னேறப் படிக்கட்டாய்
முதுகெலும்பைத் தந்தவனே!

அடல்மறவர், யாருக்கும்
அஞ்சாத தமிழர்என
உடன்பிறப்புப் பெரும்படையை
உருவாக்கி வென்றவனே!

தென்புலத்தை மீட்கவந்த
தீரர்களை, வீரர்களை
அன்பு முகம்காட்டி
அரவணைத்துச் சென்றவனே!

மொட்டவிழ்ந்த மலர்த்தேனாய்
முப்பால் குடித்தவனே!
கட்டறுத்துப் பகைவெல்லக்
கணைகள் விடுத்தவனே!

கொட்டடியிற் சிறைப்பட்டும்
கொஞ்சுதமிழ் அன்னைக்கு
மட்டற்ற எழுச்சிப்பா
மாலை தொடுத்தவனே!

வேலின் நுனிக்கூர்மை
வில்லம்பின் போர்ப்பாய்ச்சல்!
நூலின் மதிநுட்பம்!
நுண்ணோக்கும் தொலைப்பார்வை!

ஆலின் விழுதாகி
அடிமரத்தைத் தாங்கிநிற்க,
"ஸ்டாலின்" எனும்எங்கள்
"தளபதி"யைக் கொடுத்தவனே!

ஊளையிடும் நரிக்குலத்தை
உன்பேரன் "உதயநிதி"
வாள்சுழற்றிக் களமாடும்
வளவன்அந்தச் சோழன்போல்

தூள்படுத்தும் காட்சியிலே
தொண்டர் பெருங்கூட்டம்
தோள்சிலிர்க்கும் எழுச்சி!உன்றன்
தொடர்ச்சி!கொள்கை நீட்சியன்றோ!

மறையுமோ அழகுமுகம்?
மறக்குமோ ஆசைமுகம்?
உறங்கினால் கனவிலும்
உனதுமுகம்! எம்தலைவா!

நினைவுநாள் உனக்கில்லை!
நேற்று,இன்று, நாளைஉன்னை
நினையாத நாள்ஒன்று
நிச்சயமாய் எமக்கில்லை!

வாராது போல்வந்த
மாமணிநின் திருவடியை
ஈரக் கடலலைகள்
எப்போதும் வணங்கிஎழும்!

கோள்களும்உன் பெயர்போற்றிக்
கொண்டாடும்! நாட்காட்டித்
தாள்களும்உன் பொதுவாழ்வுச்
சாதனையைக் கவிபாடும்!

மூப்பிலும்நீ தமிழ்நாட்டை
முழுவதுமாய் சுற்றிவந்து
காப்பாற்றி வைத்ததனால்
கைகூப்பும் எண்டிசையும்!

மேற்குமலைத் தொடர்ச்சியிலே
மிதந்துவரும் காற்றும்,உன்
நாற்காலிச் சக்கரத்தை
நாடிவந்து முத்தமிடும்!

மழைமுகில்உன் எழுதுகோல்
மையில்,மையல் கொண்டதனால்
பொழியும்இளந் தூறல்எனும்
பூத்தூவி உனைவணங்கும்!

வெண்ணிலவின் தலைமையிலே
விண்மீன்கள் கூட்டம்இந்த
மண்மீதுன் நினைவிடத்தில்
மலர்வளையம் வைக்கவரும்!

ஓங்கும்எழிற் பூவனங்கள்
ஒன்றாகி அணிவகுத்துத்
தூங்கும்உன்றன் கல்லறையில்
தோரணமாய் காட்சிதரும்!

முன்விழித்து நீஎழுந்த
பின்,விழிக்கும் சூரியன்உன்
பொன்னடிக்குக் கண்விழித்துத்
தன்வணக்கம் சொல்லவரும்!

நோற்றவத்தால் பிறந்தவனே!
நூலகநூல் அத்தனையும்
ஆற்றாமல் படபடக்கும்!
அறிவுமகன் உன்பிரிவால்!

தோற்றமுண்டு! முடிவில்லை!
துலங்கும்உன்பேர் காலம்வென்று
வீற்றிருக்கும் பெரும்பேறு!
விழாவெடுக்கும் வரலாறு!

கலைவணங்கும்! சிலைவணங்கும்!
"கருவில்வந்த திரு"நின்னை
மலைவணங்கும்! வான்வணங்கும்!
வையகமே உனைவணங்கும்!

உலகமொழி அத்தனையும்
ஒருகுடைக்கீழ் வந்துநின்றே
தலைவணங்கும்! உனதுபுகழ்
தமிழ்போல வாழ்க!என்றே!

வென்றெழுவோம் சோதனையை!
வெறிப்பகையை முறியடிப்போம்!
என்றும்உன்றன் வழிநடப்போம்!
இனஉரிமை மீட்டெடுப்போம்!

ஒன்றுபட்டுத் தோழரெல்லாம்
"உயிர்எமக்குக் கழகம்"என
நின்றெழுவோம்! என்றுனது
நினைவிடத்தில் சூளுரைப்போம்!



**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**

## உதான் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட

# வேலூர் விமான நிலையத்தின் தற்போதைய நிலை என்ன?

## மாநிலங்களவையில் இரா. கிரிராஜன் கேள்வி !

*புதுடெல்லி, ஆக.7*

உதான் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட வேலூர் விமான நிலையத்தின் தற்போதைய நிலை குறித்தும், பல விமான நிலையங்கள் செயல்பாட்டுக்கு வராதது குறித்தும் ஒன்றிய அரசிடம் தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

நாடாளுமன்றத்தின் இந்த ஆண்டுக்கான மழைக்கால கூட்டத்தொடரில் காலந்துகொண்டுவரும் தி.மு.க.வை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா. கிரிராஜன், உதான் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பல விமான நிலையங்கள் இன்னும் முழுமையடையாமல் இருப்பதும், பணிகள் முடிக்கப்பட்ட விமான நிலையங்களில் விமான



சேவை எதுவும் இல்லாததும் உண்மையா? இந்த திட்டத்தில் மாநில வாரியாக கட்டி முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ள விமான நிலையங்களின் விவரங்கள் என்ன? அறிவிக்கப்பட்ட, ஆனால் பணிகள் முடிக்கப்படாத விமான நிலையங்களின் பட்டியல்? இந்த திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? உள்ளிட்ட கேள்விகளை சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் எழுப்பியிருந்தார்.

இவற்றுக்கு ஒன்றிய அரசின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் முரளிதர் மோஹோல் அளித்துள்ள பதிலில், உதான் திட்டத்தின் கீழ் 17 ஹெலிபோர்ட்கள் மற்றும் 2 நீர்வழி விமான நிலையங்கள் உட்பட மொத்தம் 95 விமான நிலையங்கள் உருவாக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளன என்றும்; இதற்கான விமான நிலையங்கள், ஹெலிகாப்டர் நிலையங்கள், நீர்வழி விமான நிலையங்களைப் புனரமைத்து மேம்படுத்துவதற்காக, முதற்கட்டமாக ரூ.4,500 கோடியும், இரண்டாம் கட்டமாக ரூ. 1000 கோடியும் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

செயல்பாடு மற்றும் விமானம் தொடர்பான காரணங்களால் தேஷ்பூர், காண்ட்லா, டாட்யா, கோண்டியா, பதான் கோட், ஜெய்சல்மர், பாக்யோங். குஷிநகர், அலிகார், அசம்கர், சித்ரகூட், ஷ்ரவஸ்தி, மொராதாபாத் மற்றும் கூச் பெஹார் ஆகிய 14 விமான நிலையங்களில் திட்டமிடப்பட்ட வணிக விமானச் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 10 ஆண்டுகளில் 120 புதிய இடங்களையும், 4 கோடி பயணிகளையும் இலக்காகக் கொண்டு 2026 ஜூலை 4ஆம் தேதி உதான் திட்டத்தின் அடுத்த கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளது; 2026-27 முதல் 2035-36ஆம் நிதி ஆண்டுகளுக்கு இடையில் ரூ. 28,840 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்; இதில் HINER எனப்படும் மலைப்பாங்கான, வடகிழக்கு மற்றும் வளர்ச்சி நோக்குடைய மாநிலங்கள் அல்லது மாவட்டங்களில் விமான நிலைய மேம்பாட்டிற்கு ரூ.12,159 கோடியும், 200 ஹெலிபோர்ட்களின் மேம்பாட்டிற்கு ரூ. 3,661 கோடியும் அடங்கும் என்றும் சிவில் விமான போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

தி.மு.க. எம்.பி. கிரிராஜன், வேலூர் விமான நிலையத்தின் தற்போதைய நிலை மற்றும் பணிகள் நிறைவடைய எவ்வளவு காலம் ஆகும் என எழுப்பிய கேள்விக்கு, பணிகள் அனைத்தும் நிறைவடைந்துவிட்டாலும், BCAS பாதுகாப்பு அனுமதி மற்றும் DGCA உரிமம் தொடர்பான செயல்முறைகள் நடைபெற்று வருவதாக ஒன்றிய இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.